கனவின் தத்துவம்

2 JUN 1954

பண்டித் ஜி. கண்ணையா

ஆத்ம யோக ஞான சபை

சென்னை—7.

1953.

0-6-0

முதல் பதிப்பு 1953.

Copy Right Reserved.

76867

இப்புத்தகத்தை சபைக்கு நன்கொடையாக
அச்சிட்டு உதவிசெய்தவர் :—
M. R. **அப்பாதுரை,** B.A.,
அவர்கள்.

The Premier Art Press, Madras—7.

முன்னுரை

கனவு! கனவு! உண்மைக்கு அப்பால் உணரும் போது மட்டும் உண்மை உணர்வை உண்டாக்கும் கனவு!

கண்களை மூடி இருக்கும்போது உருவங்களைக் காணவும், செவிகள் செயலற்றிருக்கும்போது சப்தங்களைக் கேட்கவும், வாய் மூடிக்கிடக்கும்போது பேசவும், கால்கள் அசைவற்றிருக்கும்போது நடக்கவும் கூடுமென்பதை மனிதனுக்குக் குறிப்பாக அறிவுறுத்திக் காட்டுவது கனவு! இல்லை, மனிதன் தன் விழிப்பு நிலையில் செய்ய முடியாதது என்று நினைத்திருக்கும் அருஞ்செயல்களை அவன் செய்யக்கூடும் முயற்சித்தால் என்பதை செய்து காட்டுவதன் மூலம் விளக்கும் கனவு! இது மட்டுமல்ல, மனிதனுக்கு எதிர் காலத்தில் நேரப்போகும் மாறுதல்களைக் குறிப்புப்படங்கள் (Symbols) மூலம் எடுத்துக்காட்டி. எச்சரிப்பது கனவு!

தன்னை மறந்து தூங்கும்போது, தன்னிலேயே தோன்றி, விழிப்புநிலையைப் போலவே இன்ப துன்ப அனுபவத்தை மனிதனுக்குக் கனவு உண்டாக்குகிறது. இத்தகைய அரும் தன்மைகள் கொண்ட கனவு அடிக்கடி உண்டாகப் பெற்றும் மனிதன், அது என்ன? அதன் தத்துவம் யாது? அது தனக்குக் குறிப்பாக என்ன காட்டுகிறது? என்பதை அறிந்துகொள்ள ஆவலுறும விருப்பது மிகவும் விந்தை! தனதல்லாத, தனக்குச் சம்பந்தமில்லாத வீண் காரியங்களைத் தெரிந்துகொள்வதில் மட்டற்ற ஆவல் கொண்டு திரியும் மனிதன், தன்னில், தன் சம்பந்தமாய்த், தனக்காக உண்டாகும் கனவைத் தெரிந்துகொள்ள முயற்சிக்கின்றானில்லை.

கனவு மனிதனுக்கு உதவிசெய்வதற்காக உண்டாகும் தோற்றம். அவனுக்குப் பல நாட்களுக்குப்பின் நடைபெறப்போகும் சம்பவங்களை விளக்கிக்காட்டி, அவைகளை அவனுக்குப் பயன்படும் வண்ணம் செய்து கொள்ளும் முறைகளை எடுத்துக்காட்டி, இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் இணைத்துக் காட்டுவதன் மூலம் நிகழ்காலத்தை நிலைபெறச் செய்யும் வழிகளை நடத்திக் காட்டுவது கனவு. கனவின் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளாத மனிதன், தனக்கென அளிக்கப்பட்ட ஓர் பெரும் செல்வத்தைப் பராமுகமாய் இழந்தவனுக்கொப்பாவான். **கனவை அறியாத மனிதனின் வாழ்க்கை கனவே.**

கனவென்பதென்ன ? ஏன், எப்படி உண்டாகிறது? என்பவைகளைப் பற்றி இச்சிறு நூலில் சுருக்கமாக விளக்குகிறோம்.

பண்டித் ஜி. கண்ணையா

கனவு சாதனை

விரும்பும்போது கனவு காணுங்கள். அதனால் வருங்காலத்தில் நடக்கப்போவதை அறிந்து முன்னெச்சரிக்கையுடன் இருக்கலாம்.

விரும்பும்போது கனவுகாணக் கற்றுத் தருகிறோம்.

உங்கள் கனவை விவரமாக எழுதி அனுப்பினால் அது உங்களுக்குச் சொல்வது இன்னதென ஆதாரத்துடன் விளக்கிச் சொல்கிறோம்.

ஆத்ம யோக ஞான சபை
சென்னை-7.

கனவின் தத்துவம்

மெல்லெனத் தென்றல் வீசத், தண்ணென நீர்த்திவலைகளைத் தெளித்தவாறு அலைமோதும் கடற்கரையில், பாலினும் தூய நிலவொளியில், பரந்த மணற் பரப்பிற் படுத்து வானத்தை நோக்கி விண்மீன்களை எண்ணிக் கொண்டிருக்க; தூய வெண்புகைப்படலமொன்றங்கு திரண்டு, சற்று நேரத்தில் மனித உருவாக மாறி, கீழிறங்கி வந்து என் முன்நின்று, "மகனே! வா!" என்றழைக்க, நான் "எங்கு" என்று கேட்க, "எல்லோரும் ஒரு நாளைக்கு எங்கு செல்வார்களோ அங்குதான்" என்று விடை பகர்ந்தவாறு தன் இருகரங்களால் என்னைச் சேர்த்தணைத்து வானத்தின் மேற்செல்ல, நான் "விடு, விடு; இப்போது நான் அங்குவரத் தயாராயில்லை மண்ணுலகில் மக்களுக்கு இன்னும் நான் செய்ய வேண்டிய கடன்கள் சிலதுண்டு. அவைகளைச் செய்து முடித்துப் பின்னொரு நாளைக்கு அங்கு வருகிறேன்" என்று சொல்லியவாறு அதன் பிடியிலிருந்து விடுபட முயற்சி செய்த என்னை, "அது முடியாது நீ இப்போதே வந்தாக வேண்டும்" என்று சொல்லியவாறு அது என்னை மேலும் இறுக்கிப் பிடித்து இம்பருலகின் பக்கம் எடுத்தேக, நான் திடுமென மனதைக் குவித்துப் பிடியிலிருந்து நழுவி நிலத்தை நோக்கி, இருதயம் துடிக்கத் திடுமென விழ என் மனைவி "நாதா! என்ன அது? எழுந்திருங்கள்" என்று சொல்லித் தட்டியழைக்கக் கண்விழித்த நான் கண்டது கனவென்பதை யறிந்துக் கலக்கம் தணியப் பெற்றேன்.

நாட்கடனை முடித்து ஓய்வு கொள்ளும் கருத்துடன் படுக்கச் சென்று, தூக்கமேற்கொள்ள, வாழாத வேறோர் உலகில் விழிப்படைந்து, வாழும் உலகைப்போல் வாழ்க்கை காணும் வகையறியா நிலை கனவு! இது என்ன? எப்படி உண்டாகிறது? ஏன் உண்டாகிறது? என்பவைகளை ஆராய்வோம்.

கனவின் தத்துவங்களை அறிந்து கொள்ளுமுன், விழிப்புநிலை, தூக்கம் இவைகளின் தத்துவங்களைச் சற்றுத் தெரிந்துகொள்ள வேண்டும். பகலில், அதாவது விழிப்பு நிலையில் நாம், அதாவது நம் உணர்வு பொதுவாக மனம் என்று சொல்லும் முன் மூளையில் உள்ள புற மனதுடன் ஒன்றி இருக்கிறது. அங்கிருந்தவாறு **ஐம் புலன்கள் வழி உண்டாகும் வெளியுலகத் துடிப் புகளைப் படம் பிடித்தளிக்கும் புறமனதில் உணர்ந்து இன்பமோ, துன்பமோ அனுபவித்துக்கொண்டு செயலாற்றியவாறு இருக்கும் நிலையை விழிப்பு நிலை—ஜாக்ரதாவஸ்தை** என்கிறோம்.[1]

நாம் அல்லது நம் உணர்வு புறமனதை முற்றும் கடந்து உள் மனம், சித்தத்துள் ஒன்றி இச்சையற்றுக் கிடக்கும் நிலையைத் **தூக்கம்** என்கிறோம்.[2]

தூக்கத்தில் சித்தத்துடன் ஒன்றி இருக்கும்போது நம் உணர்வின் விருப்பத்திறமை, இச்சாசக்தி மங்கி இருக்கிறது. விழிப்பு நிலையில் ஓர் நல்ல புத்தகத்தைப் படிப்பதில் நம் கவனம் ஈடுபட்டிருக்கும்போது எப்படி

---

1 புறமனம் என்றால் என்ன என்பதை "**உள்மனமும் புறமனமும்**" என்ற நூலில் படித்தறியலாம்.

2 தூக்கத்தின் முழு விவரங்களை நமது "***நித்திரையின் தத்துவம்***" என்ற நூலில் காணலாம்.

மற்ற உடல் அவயவங்களின், நம்மைச் சுற்றியுள்ள பொருள்களின் நினைப்பு நமக்கிருப்பதில்லையோ, அப்படி சித்தத்துள் ஒடுங்கி இருக்கும்போது அதைத் தவிற மற்ற எந்த நினைப்பும் நமக்கிருப்பதில்லை. சித்தத்துள் பெறும் ஓய்வை மட்டும் தூக்கச் சுகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாமாக எதையும் விரும்பிச் செய்யவோ, அனுபவிக்கவோச் செய்வதில்லை. அதாவது **இச்சா சக்தி ஓய்வடைந்த நிலையில் சித்தத்துள் ஒன்றியிருக்கும் நிலையைத் தூக்கம்** என்கிறோம்.

புறமனதை விட்டுச் சித்தத்துள் ஒடுங்கப் போகும் போது நம் இச்சா சக்தி மங்கப்பெறுமல்—கவனம் கொண்டிருக்கும்வாறே—ஒடுங்கப்பெற்றுல் கனவுநிலை உண்டாகிறது. "நீ அதையே நினைத்துக்கொண்டு படுத் திருப்பாய். அதனுல்தான் அத்தகைய கனவு கண்டாய்" என்று சொல்லக் கேட்கிறோமல்லவா? ஆகையால், விழிப்பு நிலையிலிருந்து தூக்கநிலைக்குப் போகும்போது கவனம் மங்காமல் ஓர் இச்சையுடன் கூடி இருக்கப்பெற் றுல் தவறுமல் கனவு உண்டாகும் என்பது புலப்படு கிறது. நம் **உணர்வு, இச்சையுடன்கூடி சித்தத் துள் ஒடுங்கி இருப்பதைக் கனவு** என்கிறோம்.

உணர்வுக்கு வேலை கொடுத்துப் பழகிய அறிவாளி கள் அடிக்கடி கனவு காண்பார்கள். ஏனெனில், அவர் கள் உணர்வில் எப்போதும் ஓர் நல்ல விருப்பம் இருந்து கொண்டே இருக்கிறது. மந்தபுத்தியருக்கு விழிப்பு நிலையில் காணும் வெளியுலகத் தொடர்பிலன்றி வேறு எந்த இச்சையும் இருப்பதில்லையாகையால் மிகக் குறை வாகக் கனவு காண்கிருர்கள். தூங்கப் போகும்போது தூங்க வேண்டுமென்ற ஓர் நினைவைத் தவிற அவர் களுக்கு வேறு இச்சை கிடையாது.

கனவில் நாம் காணும் பொருள்கள், கேட்கும் வார்த்தைகள், செய்யும் செய்கைகள், கனவு இருக்கும் வரை உண்மை போலவே தென்படுகின்றனவல்லவா? இது எப்படி ஆகிறது என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள சில விஞ்ஞான விதிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். விழிப்பு நிலையில் நாம் சுமார் 20 அடி உயரமுள்ள ஓர் மரத்தைப் பார்க்கிறோம். ஒரே விநாடியில் இது பலான மரம் என்று அறிந்துகொள்கிறோம். உண்மையில் அம்மரத்தின் ஒவ்வொரு அங்குலப் பகுதியையும் நாம் கண்களால் பார்த்து முடிக்கவில்லை. ஒரே சமயத்தில் நம் கண்கள் 20 அடி உயரத்தைத் தன்னுள் கொள்ளமுடியாது. சுமார் 1 அல்லது $1\frac{1}{2}$ அங்குலப் பரப்புடைய நம் சிறு கண்கள் அப்பெரிய உருவை அப்படியேத் தன்னுள் கவர்ந்துகொள்ள முடியாதல்லவா? அப்படியானல் ஒரே விநாடியில் அவ்விருபதடி உயரமான மரத்தை நாம் எப்படி அறிந்து கொண்டோம்?

போட்டோ பிடிக்கும் காமிராவைப் பார்த்திருப்பீர்களல்லவா? அது என்ன செய்கிறது? 6 அடி உயரமுள்ள மனிதனை 6 அங்குல உருவமாகச் சுருக்கிப் படம் பிடித்திருக்கிறதல்லவா? இந்த 6 அங்குலப் படத்தில் அவ்வாறடி மனிதனின் உருவம் முழுவதும் நிரம்பியுள்ளது. இது எப்படி ஆயிற்று? வெளியிலிருந்த 6 அடி உயர மனிதனிலிருந்து காமிராவை நோக்கிவரும் ஒளிக்கதிர்கள் காமிராக் கண்ணுடியில் குவிந்து புகுகின்றன. கண்ணுடியின் பின்புறத்தில் கண்வைத்துப் பார்த்தால் எதிரிலுள்ள மனிதனின் உருவம் அப்படியேச் சிறிய அளவாகத் திரையில் படுவதைக் காணலாம். ஒளிக்கதிர்கள் எப்போதும் நேராக, செங்குத்தாகப் பாய்வதில்லை. ஒளியைத் தன்னுள் ஏற்கும் பொருள்களில் அவை எப்போ

தும் குவிந்தே புகுகின்றன. இதேபோல் ஒரு பொருளிலிருந்து வெளிப்பரவும் ஒளிக்கதிர்கள் விரிந்து செல்கின்றன. ஓர் சிறு கண்ணாடிக்குப் பின்புறத்தில் ஓர் விளக்கையேற்றி வைத்தால், அச்சிறு கண்ணாடியின் வழியே ஊடுருவி வெளிப்படும் ஒளிக்கதிர்கள் பரவலாகப் பரந்து பாய்வதைக் காணலாம். சினிமாக்களில் இந் நியமமே கையாளப்படுகிறது. ஓர் சிறு கண்ணாடியின் வழியே வெளிப்படும், பிலிம் உருவங்களைத் தாங்கிய ஒளிக்கதிர்கள் பரவலாக வெளிவந்துத் திரையில் தாக்குவதால், சிறு உருவங்கள் பெரியவைகளாகத் தெரிகின்றன. இவ்வுதாரணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது—**ஒன்றிலிருந்து வெளிச்செல்லும் ஒளிக்கதிர்கள் பரவலாக விரிந்தும், ஒன்றை நோக்கி உட்புகும் ஒளிக்கதிர்கள் குவிந்தும் பாயும்** என்ற நியமத்தையே. இதைக் "குவிதல், விரிதல் நியமம்" என்போம். இந்த நியமத்தை நன்ருகத் தெரிந்துகொண்டால் கனவின் தத்துவத்தை எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும்.

20 அடி உயரமான ஓர் மரத்தை ஒரே விநாடியில் நாம் எப்படி அறிந்துகொள்ள முடிகிறது என்பதை இப்போது காண்போம். நம் கண்கள் காமிராவின் கண்ணாடி (Lens) போன்றவை. ஒளி நியமப்படி 20 அடி உயர மரத்திலிருந்து கண்களை நோக்கிப் பாயும் ஒளிக்கதிர்கள் குவிந்து அப்பெரு மரத்தை ஓர் சிறிய உருவத்தில் உருவாக்கி நம் முன்மனதில் படம்பிடித்துக் காட்டுகின்றன. முன்மனதில் தோன்றும் அச்சிறு உருவை அப்படியே உள்ளூரக் கண்டுதான் வெளியிலுள்ள அப்பெரு மரத்தை நாம் அறிந்துகொள்கிருேம்.

சிலர், சிலசமயம் வெளியில் இல்லாதிருக்கும் ஓர்

பொருளை இருப்பதாகக் கண்களால் காண்பார்கள். இதை உருவெளித்தோற்றம் (Hullucination) என்பார்கள். இது எப்படி ஆகிறதெனக் காண்போம். முதலில் முன்மனதில் ஓர் சிறு உருவம் கற்பனையால் உண்டாக்கப்படுகிறது. அவ்வுருவிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் கண்கள் வழியே விரிவடைந்து வெளியில் பெரிய உருவாகத்தென்படுகிறது. இங்கே ஒளிக்கதிர்களின் விரிதல் நியமம் நடைபெறுகிறது. ஆனால் இந்நிலை எப்போதோ, யாரோ சிலருக்கு மட்டும் உண்டாகிறது. அதைப்பற்றி நாம் விரிவாக இங்குத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

குவிதல் நியமப்படி கண்கள் வழியே முன்மனதை அடைந்த வெளிப் பொருளின் உருவம் முன்மனதை விட்டு அடுத்த விநாடியில் மறைந்துவிட்டாலும், அது அத்துடன் அழிந்து விடுவதில்லை. அப்படி அழிந்து விடுமானால் மறுபடி நாம் விரும்பும்போது அதை முன்மனதில் உண்டாக்கிக் காணமுடியாது. ஆனால் நடைபெறுவதென்ன? முன்மனதில் அடைந்த உருவம் மேலும் சூக்குமமாகக் குவிந்துப் பின்மனதை அடைகிறது. அங்கு வெகுகாலம்வரை இருக்கிறது. இதனால் தான் நாம் விரும்பும்போது அதை ஞாபகப்படுத்தி அறிய முடிகிறது. ஞாபகப்படுத்தலென்பது சித்தத்துள்—பின்மனதுள்—பதிந்திருக்கும் அவ்வுருவை மறுபடி முன்மனதுக்குக் கொண்டுவந்து காண்பதுதான். பின்மனதிலிருந்து முன்மனதுக்கு வரும் அச்சூக்கும உருவம் மறுபடி விரிதல் நியமப்படி விரிந்து, முதலில் முன்மனதில் பதிந்த அதே அளவாக முன்மனதில் தோற்றமளிக்கிறது. இப்படி முன்மனதைக் கடந்து பின்மனதில் குடிபுகும் உருவம் முதலியவைகளை வேதாந்த மொழி

யில் வாசனைகள் அல்லது சம்ஸ்காரங்கள் என்று சொல்லப்படும். ஓர் உதாரணத்தால் இதைக்காண்போம் :—

ஓர் பாதையாகச் சென்று கொண்டிருக்கும்போது ஓர் அழகிய மாடி வீட்டைக் காண்கிறோம். அம்மாடி வீட்டின் வடிவம் ஒளிக்கதிர்கள் வழியாய் குவிதல் நியமப்படி கண்களில் ஊடுருவி முன்மனதில் சிறு உருவாய்ப் பதிகிறது. இப்போதுதான் "இது மாடி வீடு" என்று நாம் அறிகிறோம். அடுத்த விநாடியில் அடுத்துள்ள ஓர் மாமரத்தைக் காண்கிறோம். இப்போது முன் மனதில் மாமரத்தின் குவிந்த சிறுவடிவம் இருக்கிறதென்பதை நாம் அறிவோம். இதற்கு முன்னிருந்த மாடி வீட்டின் சிறு உருவம் என்ன ஆயிற்று? முன்மனதிலிருந்து மறுபடி மிக நுண்ணிய உருவமாகச்சிறுத்து அது பின்மனதில் குடிபுகுந்து விட்டது. இதுஎப்படி நமக்குத் தெரிகிறது? வீட்டுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு அம் மாடி வீட்டை நினைவுபடுத்துகிறோம். என்ன ஆகிறது? பின்மனதில் பதிந்துள்ள அதன் சிற்றுருவம் விரிதல் நியமப்படி வெளிப்பட்டு முன்மனதில் முன்பு மாடி வீட்டைக் கண்ணால் கண்டபோது ஆன அதே அளவு உருவமாகத்தென்படுகிறது. இதையே முன்மனதில் உள்ளுரக் காண்கிறோம். பின் மனதில் இவ்வுருவம் இருந்திராவிட்டால் இப்போது முன்மனதில் அது எப்படி வந்திருக்கும்? ஏனெனில் இப்போது கண்களுக்கெதிரில் மாடி வீடு இல்லை. முன் மனதில் முதலில் பட்ட அவ்வுருவம் அங்கே இருந்திருக்கவுமில்லை, அடுத்து மாமரத்தைக் கண்டபோது அவ்வுருவுக்கு இடம் கொடுத்து மறைந்து விட்டது. இம்மறைவு அப்படியே அழிவாக இருக்குமானால் நினைவு கூறும்போது மறுபடி முன்மனதில் தோன்றியிருக்க

முடியாது. ஆகவே பின்மனதில் இது இருந்தே இருக்க வேண்டும் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது.

சாதாரணமாக நாம் கண்களால் பார்க்கும் எல்லா உருவங்களும் பின்மனதில் வாசனை வடிவங்களாகப் பதிவதில்லை. மறுபடி நாம் உணர வேண்டும் என்ற கருத்துடன் கவனம் வைத்துப்பார்க்கும் உருவங்களை பின்மனதில் வாசனைகளாகப் பதிகின்றன. பாதையில் மாடி வீட்டை மட்டும் நாம் பார்க்கவில்லை, மற்றும் அநேக பொருள்களைப் பார்த்தோம். ஆனால் அவை களெல்லாம் வீட்டுக்கு வந்த பின் நம் மனக்கண்ணுக் குத்தோன்றுவதில்லை. ஏனெனில் அவைகளை நாம் கவனம் கொண்டு பார்க்கவில்லை. கவனம் கொண்டு பார்த்த மாடி வீட்டின் உருமட்டும் வேண்டும்போது ஞாபகத் துக்கு வருகிறது. ஆகையால் **நாம் கவனம் கொண்டு பார்க்கும் உருவங்களெல்லாம், சூக்கும வாசனை வடிவங்களாகச் சித்தத்தில் பதிகின்றன** என்ற உண்மை நமக்குக் கிடைக்கிறது.

வெகுகாலத்துக்கு முன் சித்தத்தில் பதிந்தவை அதிக முயற்சியின் பேரிலும், சமீப காலத்தில் பதிந் தவை எளிதாகவும்; அதிக கவனத்துடன் பார்க்கப் பட்டவை எளிதாகவும், இலேசாக மட்டும் கவனிக்கப் பட்டவை அதிக முயற்சியின் பேரிலும் ஞாபகப்படுத்தி அறிய முடிகிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

காமிராவைக்கொண்டு உருவங்களைப் படம் பிடிப் பது போல், கிராமபோன் தட்டு, சில வகைப் பிலிம் களில் சப்தங்களைப் பதிப்பிக்கிறோம் (Recording-ஒலிப் பதிவு) அல்லவா? இவைகளும் முன் கூறிய குவிதல், விரிதல் நியமப்படியே நடைபெறுகின்றன. பரவலாக

நாம் பேசும் சப்தத்தின் அலைகள் குவிந்து தட்டில் சூக்குமமாகப் பதிகின்றன; தட்டிலுள்ள அச்சூக்குமச் சப்த அலைகள் விரிதல் நியமப்படி விரிந்து மறுபடி கேட்கும் நிலைக்கு வருகின்றன. இப்படியே ஒலிகள் நம் மனதிலும் பதிகின்றன. வெளியிலுண்டாகும் ஒலியலைகள் காதின் வழியே குவிந்து முன்மனதை அடைந்து நிற்கும்போது நமக்கு அவ்வொலியறிவு உண்டாகிறது. ஒளி உருவங்களைப் போலவே, முன்மனதை அடைந்த சப்த அலைகளும் மேலும் சூக்குமங்களாகிச் சித்தத்தில் பதிந்து நிலைபெறுகின்றன. அதனாலேயே நாம் ஒரு முறை கவனம் கொண்டு கேட்ட சப்தங்களை மறுபடி நினைவுபடுத்தி அறிய முடிகிறது. ஒளி உருவைப் போலவே சப்தமும் சிலசமயம் சித்தத்திலிருந்து வெளிப்பட்டுப் புறமனதை அடைந்த பின், மறுபடி அங்கிருந்து விரிதல் நியமப்படி காதின் வழியே வெளிப்பட்டு வெளிச் சப்தமாக மாறி வெளிச் சப்தம்போல் கேட்க நேரிடுகிறது. இதை உருவெளிக் கேள்வி (Clairaudience) என்பார்கள். இதுவும் எப்போதோ, யாருக்கோதான் உண்டாகும். அதைப் பற்றியும் நாம் விவரமாக இங்குத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. ஒளியைப் போலவே ஒலிகளும் சித்தத்தில் வாசனைகளாகக் குடிபுகுகின்றன என்பதை மட்டும் இங்கு தெரிந்து கொண்டால் போதும்.

ஒளிக்கும், ஒலிக்கும் கூறப்பட்ட இதே நியமப்படி சுவை, மணம், சூடு, குளிர் போன்ற ஸ்பர்ச உணர்வுகளும் வாசனை வடிவங்களாகச் சித்தத்தில் பதிகின்றன. கண்வழி உருவமும், காது வழிச் சப்தமும் குவிந்து சென்று, சூக்குமமாகிச் சித்தத்தில் படிவது போலவே மூக்கு வழி நாற்றமும், நாக்கு வழிச் சுவையும், மெய்

வழிப் பரிச உணர்வுகளும் சூக்குமமாகிச் சித்தத்தில் வாசனைகளாகப் பதிகின்றன. புறமனம், ஐம்புலன் உணர்வுகளை வெளியுலகிலிருந்து ஏற்று சூக்குமப் படுத்திச் சித்தத்துக்கு அனுப்பிவைக்கும் தொழிற்சாலை. புறமனத் தொழிற்சாலையில் செய்து முடித்தனுப்பப்படும் உணர்வுகளைத் தன்னுள் சேமித்துவைக்கும் கிடங்கு (Store house) சித்தம். சித்தத்துக்கு ஒரு உருவை அல்லது உணர்வை சூக்குமப்படுத்தி அனுப்பி விட்டப் புறமனம் புலன் வழி மற்றொன்றை யேற்கத் தயாராகிறது. இதனால் புறமனதில் எந்த உணர்வும் நிலையாய் இருப்பதில்லை. இதே புறமனம் மறுபடி சித்தத்திலிருந்து வெளிப்படும் சூக்கும வாசனா உணர்வுகளை முன்போல் பெரிதாக்கி நமக்குக் காட்டுகிறது. ஆக புறமனம் இரண்டு தொழில்களைச் செய்கிறது. ஒன்று வெளியுலகத் துடிப்புகளையேற்று சூக்குமப்படுத்திச் சித்தத்துக்கனுப்புதல், மற்றது சித்தத்திலிருந்து வெளிப்படும் வாசனை வடிவங்களை முன்போன்ற அளவில் உருவகப் படுத்திக் காட்டுதல். ஆக வெளியிலிருந்து வரும் பெரிய உருவங்களையும். சித்தத்திலிருந்து வரும் சூக்கும உருவங்களையும் ஒரே சம அளவான உருவங்களாகப் புறமனம் மாற்றிக்காட்டுகிறது.

மேற்கூறியவைகளிலிருந்து நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது இதுதான் :—**ஐம்புலனறிவும் புறமனதில் அப்படியேச்சிறு உருவாய்க் குவிந்து அங்கிருந்து மேலும் சூக்குமமாகக் குவிந்து சித்தத்தில் வாசனையாகப் பதிந்திருந்து, நாம் விரும்பி வெளிப்படுத்தும்போது மறுபடி புறமனதை அடைந்து அறிவுறுத்துகிறது.** சித்தத்தின் வாசனையை வெளிப்படுத்தி அறிதலை ஞாபகப்

படுத்துதல் என்கிறோம்.

இனி சித்தத்திலிருக்கும் வாசனைகள் எப்படி வெளிப்படு கின்றன என்பதைச் சற்றுத் தெரிந்துகொள்வோம் :—

சித்தத்துள் படிந்தவைகளில் நாம் எதைக் காண வேண்டு மென்று விரும்புகிறோமோ, அதுவே வெளிப் பட்டுப் புறமனதை யடைந்து நமக்கறிவுறுத்துகிற தென் பதை நாமறிவோம். சில சமயம் நாம் விரும்பிய தோற் றம் நேராகவே வெளிப்படும், வேறு சில சமயங்களில் நாம் விரும்பி வெளிப்படுத்த விரும்பிய வாசனையைத் தவிர்த்து வேறு சில வாசனைகள் வெளிப்பட்டபின் விரும்பிய வாசனை வெளிப்படும். இது நமது ஞாபகத் திறமையைப் பொருத்தது. அதாவது ஓராண்டுக்கு முன் நாம் கண்ட ஓர் மனிதனின் உருவை நினைவுபடுத்த விரும்பும்போது, உடனே அது நினைவுக்கு வராமல், அம் மனிதனைக் கண்ட இடம் முதலான உருவங்கள் நினைவுக்கு வந்தபின் அவன் உருவம் நினைவுக்கு வருவ துண்டல்லவா? இதனால் என்ன தெரிகிறது? சிலதை எளிதில் ஞாபகப்படுத்துகிறோம், சிலதை முயற்சியின் பேரில் ஞாகப்படுத்துகிறோம், சிலதை அதிக முயற்சியின் பேரிலும் ஞாபகப்படுத்த முடியாமற்போகிறோம். ஞாப கப்படுத்த முடியாதவைகள் சித்தத்தில் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. அவை சித்தத்தின் மிக ஆழத் தில் பதிந்திருப்பதே இதற்குக் காரணம். இதன் மேல் புதிய வாசனைகள் பலது பதிந்திருப்பதால் வெளிப்பட இயலாமல் இருக்கிறது. கிடங்கின் அடிப்பகுதியிலுள்ள ஒன்றை எடுக்க வேண்டுமானால், அதன் மேலுள்ளவை களை எடுத்த பின்தானே எடுக்கமுடியும்? அதைப் போல்தான் இதுவும். அடிக்கடி நினைவுபடுத்தப்படும் வாசனைகள் மேலாயிருந்து எளிதில் நினைவுக்குவர, பல

காலம் நினைவுபடுத்தப்படாமலிருப்பவை ஆழத்திலிருந்து வெளிப்படக் கடினமாய்த்தோன்றுகின்றன. சித்தத்தில் பல பிறவிகளில் சேர்த்துவைத்த வாசனைகள் உள்ளன. அவை சித்தத்தின் ஆழத்தில், மறைவில் இருப்பதால் எளிதாக நினைவுக்கு வெளிப்படுவதில்லை. அத்தகைய பழைய வாசனைகளை வெளிப்படுத்தவும் பெரும்பாலோர் முயற்சி செய்வதில்லை. யோகசாதனையால் சித்தத்தின் மிக ஆழத்தில் பதிந்திருக்கும் வாசனைகளையும் வெளிப்படுத்தமுடிகிறது. இதனால் யோகிகள் தம் முற்பிறப்புகளை அறிந்துகொள்கிறார்கள்.

நாம் புறமனதுடன் இணைந்திருக்கும் நிலையான விழிப்பு நிலையில் சித்தத்தில் பதிந்துள்ள யேதாவதோர் உருவை வெளிப்படுத்திப் புறமனதில் அறிகிறோமல்லவா? அதாவது விழிப்பு நிலையில் கண்களை மூடி வேண்டுமான ஓர் உருவை வெளிப்படுத்தி—ஞாபகப்படுத்திக்—காண்கிறோமல்லவா? இதேபோல் நாம்; அல்லது **நம் உணர்வு புறமனதைக்கடந்து சித்தத்துள் ஒடுங்கியிருக்கும்போது சில வாசனைகளை வெளிப்படுத்தி, ஞாபகப்படுத்தி அறிவதைத்தான் கனவு என்கிறோம்.** விழிப்பு நிலையில் ஞாபகப்படுத்தி அறியும்போது கண்களை மூடியிருந்து உள்ளே உருவத்தைக் காண்கிறோமல்லவா? இதைப்போல்தான் கனவில் கண்கள் மூடியிருந்தும் உருவைக்காண்கிறோம். மனதால் ஒன்றை ஞாபகப்படுத்தி அறியும்போது கண்களும், காதுகளும் தேவை இல்லாததுபோலவே, கனவிலும் உள்ளூர அறிவதால் கண் காதுகளின் தேவை இல்லாமற்போகிறது. ஓர் உருவம் சித்தத்தில் வாசனையாகப் படிகிறதென்றால் வெளிச்சமும் அதில் இருக்கிறதென்றுதானே பொருள்? வெளிச்சமில்லாமல் உருவேது? புறமனதால்

விழிப்புநிலையில் கண்களை மூடி உருவைக் காணும் போது வெளிச்சத்துடன் காண்கிறோமல்லவா? வெளிச்சம்தான் உருவாகச் சித்தத்தில் பதிந்திருக்கிறது. இதே போல் சப்த அலைக்கழிவான ஆகாயம் **சப்த** வடிவாகவே சித்தத்தில் பதிந்திருக்கிறது. கனவில் வெளிப்படும் உருவத்திலேயே வெளிச்சமும், ஆகாய அலைக்கழிவிலேயே சப்தமும் கலந்திருக்கிறது. இப்படி சுவை, மணம் முதலியவைகளும் அததற்குத்தேவையான வெளியுலகச்சாதனைகளுடனேயே பதிந்திருக்கிறதென அறியலாம். ஆகையால் **கனவில் தோன்றும் வெளிச்சம், சப்தம் முதலியவை வெளியிலிருந்துண்டாபவையல்ல, சித்தத்திலிருந்தே உண்டாகின்றன** என்பது பெறப்படுகிறது.

இதுவரை கனவென்பதென்ன? கனவில் காணும் வெளிச்சம், சப்தம் முதலியன எங்கிருந்துண்டாகின்றன என்பதைக் கண்டோம். இனி கனவில் நாம் நடப்பது போலும், பறப்பதுபோலும் காணும் காட்சிகள் எப்படி உண்டாகின்றன என்பதைக் காண்போம்:—கண், காது முதலான புலன்களின் ஞானங்கள் சித்தத்தில் வாசனைகளாகப் பதிவதைப்போலவே, நாம் செய்யும், பிறர் செய்யக்காணும் காரியங்களின் தோற்றங்களும் புறமனதை அடைந்து, சூக்குமப்பட்டு சித்தத்தில் வாசனைகளாகப் பதிகின்றன. கண்களை மூடி விழிப்புநிலையில் ஓர் உருவை ஞாபகப்படுத்தி அறிவதைப்போலவே, ஆகாயத்தில் காகம் பறப்பதையும் ஞாபகப்படுத்தி அறிகிறோமல்லவா? நடத்தல், ஓடல் முதலிய காரியங்களையும் விழிப்புநிலையில் ஞாபகப்படுத்தி அறியக்கூடுமல்லவா? இதைக்கொண்டு இக்காரியத்தோற்றங்களும் சித்தத்தில் பதிந்திருந்திருக்கவேண்டும் என்று நாம் உறுதி செய்தாக

வேண்டுமல்லவா? இந்தக் கர்ம நினைவுகளே சித்தத்தில் வாசனைகளாயிருந்து கனவில் செயல்களாக வெளிப் படுகின்றன.

இனி கனவு ஏன் உண்டாகிறது? என்பதைக் காண் போம்:—நம் வாழ்வில் ஏற்படும் சில சம்பவங்கள், அல் லது ஏற்படலாம் என்று நாம் எதிர்பார்த்திருக்கும் சில சம்பவங்கள் நம் கவனத்தை அதிகமாய்க் கவர்ந்து, பல நாட்கள் வரை கவனத்தை விட்டகலாமலிருக்கும். ஏதா வது சிக்கலில் சிக்குண்டு, அதிலிருந்து மீள வழி தெரியா மல், அதற்கான வழி காண்பதில் கவனம் ஈடுபடும் போதும் பல நாட்கள் கவனம் அதில் லயித்திருக்கும். இத்தகைய சூழ்நிலைகளில் நாம் என்ன செய்வோம்? விழிப்புநிலையில் உள்ளபோது கூட, வேறு பல காரி யங்களைச் செய்துகொண்டிருந்தும் கவனம் மட்டும் அடிக் கடி அதே நினைப்பில் ஈடுபட்டவாறு புறமனதில் அதற் கான வாசனைகளை வெளிப்படுத்தி அறிந்து கொண்டிருக் கும். "உன் கவனம் எங்கே இருந்தது" என்று பிறர் கேட்கும் அளவு, பிறரின் வார்த்தைகளைக் கேட்டும் கேளாதவர்களாக நம் கவனத்திலேயே நாமிருந்து வரு வோம். இந்நிலை நிலைபெற்றிருக்கும் நாட்களில் இர வில் நாம் தூங்கச்செல்லும்போது, மற்ற நாட்களைப் போல் நம்மை மறந்து, மெய் மறந்து தூங்கப்பெற மாட் டோம். ஏனெனில் அப்போதும் நம் கவனம் அந்தச் சூழ் நிலையிலேயே ஈடுபட்டிருக்கிறது. இப்படிக் கவனம் ஓர் குறித்த விஷயத்தில் நிலைபட்டிருந்தவாறே புறமனதைக் கடந்து சித்தத்தை அடையுமானால் அதாவது, தூக்க நிலை உண்டாகுமானால் நம் உணர்வு சித்தத்தில் விழிப் புடனேயே இருக்கிறது. மற்ற நாட்களைப்போல் சித்தத் துள் ஒடுங்கி மறைந்து நிற்பதில்லை. விழிப்பு நிலையில்

இருந்தபோது தன் விருப்பத்துக்கான வழிகளைத் தேடி ஆராய்ந்து கொண்டிருந்ததைப்போலவே, உள்மனதை அடைந்தபோதும் உணர்வு ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறது. புறமனதில் இருக்கும்போது, அம்மனதில் தன் விருப்பத்துக்குத் தகுந்த ஆராய்ச்சி உருவங்களையும்,சம்பவங்களையும் தானுக உண்டாக்கிக்காண உணர்வுக்கு முடிகிறது. ஆனல் சித்தத்தைத் தம் விருப்பம்போல் இயக்க யோகசாதனை பயின்றவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு இயலாது. ஆகையால் விருப்பத்துடன், ஆராய்ச்சிக் கருத்துடன் உணர்வு சித்தத்தை அடையும்போது, அவ் விருப்பத்தால் தூண்டப்பட்ட சித்தம், அதற்குத்தகத் தன்னுள் பதிந்திருக்கும் சில வாசனைகளைத் தானுக வெளிப்படுத்துகிறது. அதை அறியும் நிலைதான் கனவு. இதை ஓர் உதாரணத்தால் விளக்குவோம் :—

என் குழந்தைக்குப் பல நாட்களாய் விடாத காய்ச்சல் ; பல மருந்துகள் கொடுத்தும் பயனில்லை ; இதே கவலை எனக்கிரவும் பகலும் ; என் அருமைக் குழந்தை பிழைக்குமா பிழைக்காதா என்ற கவலை பெரிதாகி விட்டது. இதே கவலையுடன், இதற்கு என்ன செய்யலாம் என்ற ஆராய்ச்சி மனப்பான்மையுடன் தூங்கச் செல்கிறேன்; அப்போதும் அவ்வாராய்ச்சி என்னில் இருந்து கொண்டே இருக்கிறது. தூக்கம் சரியாக வரவில்லை ; அதே நினைப்புடன் புரண்டுகொண்டிருக்கிறேன் ; சற்று நேரம் பின் தூக்கம் என்ற நிலைக்கு உட்பட்டு விடுகிறேன் ; ஆனல் தூங்கவில்லை, கனவு காண்கிறேன். இங்கு நடந்ததென்ன ? ஆராய்ச்சி விழிப்புடன் படுக்கச்சென்ற நான் அத்துடனேயே புறமனதை—விழிப்பு நிலையை— ஜாக்ரதாவஸ்தையைக்—கடந்து சித்தத்தை அடைகிறேன். என்னுள் நிலைபெற்றிருந்த ஆராய்ச்சிக் கவனம்

867

சித்தத்தைத் தூண்டிவிட, அது என் விருப்பமான—என் குழந்தை யென்னுகு மென்ற—ஐயத்துக்குத் தன்பா லுள்ள வாசனைகளில் தகுந்தவைகளை வெளிப்படுத்து கிறது. ஆனல் அதில் வெளிப்படுபவை நான் விழிப்பு நிலையில் அறியும் பொருள்களைப்போல் நேரா யிராமல் அர்த்தமற்ற, சம்பந்தமற்ற உருவங்களாகவும், செயல் களாகவும் இருக்கின்றன. புறமனதைப்போல் சித்தத் தையும் நானுக இயக்கி, எனக்குத் தேவையான வாசனை களை வெளிப்படுத்தியிருக்க முடிந்திருந்தால் என்சந்தே கத்துக்கு வேண்டிய விடையை விழிப்பு நிலையைப்போல் நேரடியாகப் பெற்றிருக்கமுடியும் * அத்திறமை இல்லா மையால் சித்தம் தன் இச்சையாக, என் விருப்பத்தால் தூண்டப்பட்டு வெளிப்படுத்தும் அர்த்தமற்றவை போன்ற உருவங்களையும், கர்பங்களையும் கனவு யென்ற பெயரில காண்கிறேன். விழிப்பு நிலைக்குவந்ததும், அப் பழைய ஆராய்ச்சி மட்டும் புறமனதுக்குக் கொண்டு வந்து விழிப்பதால் கனவில் கண்டவைகளை மறந்து விடுகிறேன்.

இங்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன் றுண்டு. நம் உணர்வால் தூண்டப்பட்ட சித்தம் நம் விருப்பதுக்கான விடைகளையே வெளிப்படுத்துகிறதாறு லும், அவ்வாசனைகளின் வெளிப்பாடு விழிப்பு நிலை அனுபவத்தைப் போன்றிருப்பதில்லை. கனவின் மொழி குறிகளால் (Symbols) ஆனவை. அதைப்பற்றி நாம் ஒரு தனிப் புத்தகம் எழுதவேண்டும். கனவின் மொழியை நாம் புரிந்துகொள்ள முடிந்தால் ஒவ்வொரு கனவும் நம்

---

* சித்தத்தை ஆட்சிகொள்ளும் முறை பற்றி நமது "சித்து மனவசியம்" என்ற நூலைக்காணவும்

விருப்பத்துக்குத் தகுந்த ஓர் விடை கொடுப்பதை அறிந்துப் பயன் பெறலாம்.

மேற்சொன்ன உதாரணத்திலிருந்து, நம்மில் யாதோ ஒரு விருப்பம், அல்லது சூழ்நிலை ஆராய்ச்சி கவனத்தைப் பலமாகக் கவர்ந்திருக்கும்போது, அதேநினைவுடன் புறமனதை விட்டுச் சித்தத்துள் செல்வதால், தூங்கச் செல்வதால் சித்தம் தூண்டுதலடைந்து நம் விருப்பத்துக்குத் தகுந்த வாசனைகளை வெளிப்படுத்த நாம் அறிவதையே கனவென்கிறோம் என்பது விளங்கும். ஆகவே, **கனவு உண்டாகக் காரணம், ஒரு ஆழ்ந்த விருப்பமோ, சம்பவ எதிர்பார்ப்போ** என்ற முடிவு நமக்குக் கிடைக்கிறது. அறிவாளிகளுக்கு எப்போதும் உயர்ந்த குறிகோள் விருப்பங்கள் இருப்பதால் அடிக்கடி கனவு காண்கிறார்கள் ; மந்த மதியினர்க்கு திடுமென ஓர் சம்பவம் உண்டானாலொழிய, கவனத்தைக் கவரும் வேறு விருப்பம் இருப்பதில்லையாகையால் எப்போதோ ஒரு நாள் மட்டும் கனவு உண்டாகிறது.

எப்போதும் கனவுகள் மேற்சொன்ன காரணத்தாலேயே உண்டாகின்றன என்று சொல்லிவிட முடியாது. பெரும்பாலான கனவுகளுக்கு மேற்சொன்னதே காரணமாகும். உணர்வுக்கு ஞான உணவு போட்டு வளர்க்கும் அறிவாளிகளுக்கு வேறு சில காரணங்களாலும் கனவு உண்டாகலாம். அவர்கள் சித்தத்தை தம் உணர்வால் இயக்கக் கற்றிருக்கிறார்களாகையால், அவர்கள் யாதொரு விருப்பமும் இல்லாமல் தூங்கும்போதுகூட வருங்காலத்தில் அவர்களுக்கு நடைபெறப்போகும் ஓர் சம்பவத்தைக் கனவாக சித்தம் அவர்களுக்கு அறிவிக்கிறது. சித்தத்துக்கு இத்தகைய தன்மை உண்டு என்பதை **“ உள் மனமும் புறமனமும் ”** என்ற நூலில்

விளக்கி இருக்கிறோம். மூடர்களின் சித்தமும் சில சமயங்களில் இப்படி வருங்காலத்தைக் கனவாக வெளிப்படுத்திக் காட்டினாலும், அவர்கள் அதை உணர்ந்து பயன் பெறாமற்போகிறார்கள்.

அன்பும், ஆதரவும் கொண்டிருந்து இறந்தவர்களில் சிலர், இருக்கும் தம் மக்களுக்கு நேரப்போகும் சில மாறுதல்களை, அல்லது அவர்கள் தெரியாமல் திகைக்கும் சில சிக்கல்களை விலக்கும் வழிகளை, அவர்களின் தூக்க நிலையில் சித்தத்தைத் தூண்டிக் கனவாக அறிவிப்பதுண்டு. இப்படி நடைபெறக்கூடுமென்பதை நமது **"மானதத் தந்தி"**, **"ஆவி உலகம்"** முதலான நூல்களில் படித்தறியலாம்.

ஆக கனவு, விருப்பத்துடன் தூங்குவதாலும், மரித்தோரின் தூண்டுதலாலும், சித்தப் பண்பாட்டினாலும் உண்டாகும் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம்,

ஒவ்வொரு கனவும் அர்த்தம் உடையதே. கனவின் அர்த்தம் விழிப்பு நிலையைப் போன்றதல்ல. விழிப்பு நிலையில், புறமனதில் எண்ணங்களாக உதிப்பவை, கனவில் சித்தத்தில் வாசனைகளாக உதிக்கின்றன. வாசனைகள், உருவங்களாலும், செயல்களாலும் கருத்தை வெளியிடுபவையாக இருக்கும். ஞானமும் மொழியும் வேறு வேறு. மொழி ஞானத்தை வெளிப்படுத்தும் ஓர் சாதனம் மட்டுமே. மொழியில்லாமலே ஞானம் குறிப்புகளாலும், பாவனைகளாலும் வெளியிடப்படலாம். சித்தத்தின் இயக்கம் ஞானவெளியீடு மட்டுமே. ஆகையால்தான் பெரும்பாலோர் கனவைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால் பழங்காலந்தொட்டு எல்லா மனித சமூகங்களிடையேயும் கனவுக்குப் பொருள் காணும் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆனால்

இன்று விஞ்ஞான ஆதாரங்களால் கனவுக்குச் சரியான பொருள்காணும் முறை புதுப்பிக்கப்பட்டுவிட்டது. உணர்வு பண்பட்டவர்கள் மட்டும் கனவை விழிப்புப் போலவே நேரான அர்த்தத்தில் காண முடியும். மற்ற அனைவரின் கனவுகளும் குறிகளால் கருத்தை வெளியிடு பவைகளாகவே இருக்கும். இதனால் அநேகர் தம் வாழ் வின் மாறுதல்களை, சிக்கல்களை விளக்கி வழிகாட்டும் கனவின் எச்சரிக்கையை அறிந்து பயன்பெற முடியாமற் போகிறார்கள். ஒரு கனவும் உபயோகமற்றதல்ல. ஏதாவதொன்றை அறிவிக்கவே ஒவ்வொரு கனவும் உண்டாகிறது. கருத்தைக் குறிகளால் வெளியிடுவதாக இருப்பதாலேயே கனவை அர்த்தமற்ற, சம்பந்தமற்ற தொடர்பாகக் காண்கிறோம். கனவின் அர்த்த முறையை ஒன்றிரண்டு உதாரணங்களால் காண்போம்:

எங்கோ இரயில் வண்டியில் சென்றுகொண்டிருக் கிறேன்; திடுமென வண்டி கவிழ்ந்து, வண்டியிலிருப்ப வர்களெல்லாம் அலறிப் புடைத்தழுவதாகக் கனவு தோன்றினால் இதன்பொருள் "நீ சமீப காலத்துக்குள் செய்ய நினைத்திருக்கும் புது வியாபாரத்தில் உனக்கு நஷ்டம் வரும்" என்பதையோ, "நீ மேற்கொள்ள நினைத்திருக்கும் காரியம் உனக்கு நன்மை பயப்பதாய் முடியாது" என்பதையோ விளக்கும். நாம் இப்புத்த கத்தின் தொடக்கத்தில் கூறிய கனவு, எதிர்காலத்தில் யாரோ ஒரு புது நண்பரின் உதவியால் தொழிலோ, வாழ்க்கையோ முன்னேற்றமாகப் போவதைக் குறிக் கும். இக்கனவு உண்டாகும்போது நாம் எதிர்பார்த் திருந்த காரியம் புது உதவியால் வெற்றியடையும் என் பதைக்காட்டும்.

மனிதனுக்கு வாழ்க்கையில் ஏற்படவிருக்கும்

நன்மை தீமைகளை சூசகமாகக்—குறிப்பாகக்—காட்டி எச்சரிப்பதற்காகவே கனவு நிலை ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. அப்படியிருந்தும் பலர் கனவின் பயனை பயன் படுத்திக்கொள்ள முடியாமலிருக்கிறார்களென்பது வருந் தத்தக்கது. உணர்வால் புறமனதைப்போல் சித்தத்தை இயக்கும் திறமை பெற்றுவிட்டால் கனவு நேராகவே விழிப்பு நிலைபோல் வருங்காலத்தை உணர்த்தப் பெறும் திறமையைப் பெறலாம், அதாவது வியாபாரத்தில் நஷ்டம் வரும் என்பதை அப்படியே வியாபாரம் செய்து நஷ்டப்படுவது போன்ற சம்பவங்களாலேயே கனவு விளக்கும்.

சில மனோசாதனைகள் மூலம் நமக்கு என்ன நேரப் போகிறதென்பதை நாமாகவே கனவில் கண்டுகொள்ள முடியும். நான்கு மணிக்கு விழித்துக்கொள்ளவேண்டு மென்ற நினைப்புடன் படுத்தால், சரியாக நான்கு மணிக்கு விழித்துக்கொள்வதுபோல், ஒரு விஷயம் தெரிய வேண்டும் என்ற கருத்துடன் படுத்தால் அது இன்னது ஆகும் என்று தெரிந்துகொண்டு விழிக்கலாம். இதற் குத் தேவையான சாதனை முறையை வேறொரு நூலில் எழுதுகிறோம்.

முன் கூறியபடி உண்டாகும் வருங்கால வாழ்க்கை மாறுதல்களை முன் கூட்டி எச்சரிக்கும் கனவுகளை **ஞானக் கனவுகள்** என்று சொல்லுவோம். இவை மூன்று காரணங்களால் உண்டாகக் கூடுமென முன்பு கூறிவந்துள்ளதைக்கொண்டு அறியலாம். மற்றொரு காரணத்தாலும் ஞானக் கனவுகள் உண்டாகலாம். இது உடனே, வெகு சமீபத்தில், ஒன்றிரண்டு தினங் களுக்குள் நடைபெறப்போகும் ஓர் சம்பவத்தைக் குறிப் பால் காட்டுவது. இது மூன் கூறிவந்த மூன்று காரணங்

களால் உண்டாவதல்ல. சம்பவம் நடைபெறப்போகும் இடத்தில் உள்ளவர்களின் ஆழ்ந்த விருப்பத்தால் இது உண்டாக்கப்படுகிறது.

ஒரு தாய் தஞ்சாவூரில் இருக்கிருள்' மகன் சென்னையில் இருக்கிருன் ; ஒரு நாள் இம்மகன் வழக்கம் போல் நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருக்கும்போது தன் தாய் தன்னை நோக்கி அலறிப் புடைத்துக்கொண் டழுவதாகவோ, தன் தாயை சுடுகாட்டில் வைத்துங் கொளுத்திக் கொண்டிருப்பதாகவோ கனவு காண்கிருன். மறு நாள் காலை அவன் தாய் இறந்த செய்தி தந்தி மூலம் கிடைக்கிறது. இக்கனவு முன்கூறப்பட்ட மூன்று காரணங்களால் உண்டானதல்ல, கனவு காணக்கூடிய நிலையில் அவன் படுக்கவில்லை, உண்மையாகவே நன் ருகத் தூங்கிக்கொண்டுதானிருந்தான். திடுமெனக் கனவுண்டாகிறது. இது எப்படி உண்டாகிறது? இவன் தாய் பல நாட்களாகவே தஞ்சையில் நோய்வாய்ப் பட்டிருந்து வந்தாள். இவன் கனவு கண்ட அன்று பகல் வைத்தியர்கள் 'இனி அவள் தேறமாட்டாள் என்று சொல்லிப் போய்விட்டார்கள். இவன் கனவு கண்ட சில மணிநேரங்களுக்கு முன் அவளுக்கு மரணநிலை எய்துகிறது. தன் மகனின் ஏக்கம் கொண்ட தாய், தன் மன அலைகள் மூலம் மகனின் சித்தத்தைத் தூண்டி. கனவு நிலை உண்டாக்கித் தன் நிலையை அறிவிக்கிருள். இங்கு மகனின் சித்தம் அன்னையின் மன அலைகளால் தூண்டப்பட்டு இயக்கப்பட்டது. தொலைவிலுள்ள உற் ருர், நண்பர், காதலர்களிடையில் இத்தகைய கனவுகள் நேரிடுவதுண்டு. இதுவும் குறிகளால் கருத்தை வெளி யிடுவதாக உண்டாவதால் பலர் பொருளறிந்துகொள்ள முடிவதில்லை. இத்தகைய கனவுகளை **செய்திக் கனவு**

கள் எனலாம்.

இவ்விரு வகைக் கனவுகளைத் தவிர மற்ருேர் வகைக் கனவுண்டு. ஞானக் கனவுகளுக்குரிய காரணங்களோ, செய்திக் கனவுகளுக்குரிய காரணங்களோ இல்லாமல், கனவு காண்பவரின் அப்போதைய உடற்கோளாறுகளை வெளியிடுபவையாக இருக்கும். தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒருவனின் மூத்திரப்பை நிறைந்து விம்முவதாக வைத்துக்கொள்வோம், அவன் விழிக்காமல் படுத்திருந்தால் குளம், ஏரி, நதிகளில் குளிப்பதாகவோ, விழுவதாகவோ கனவு கண்டெழுவான், எழுந்ததும் நீர் கழிக்கச் செல்வான், படுக்கையில் மூட்டைப் பூச்சியோ, எறும்போ பலமாகக் கடிக்கும் போது கண் விழிக்காவிட்டால், யாருடனே சண்டையிட்டு அடிபடுவதாகக் கனவுண்டாகி விழிப்புண்டாகும், கட்டிலின் மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்போது கால்கள் கட்டிலுக்கு வெளியே தொங்கி, இன்னும் சற்றுத் தவறினல் கீழே விழும் தறுவாயில் இருந்தால் ஆகாயத்தில் பறப்பது போலவும், விமானத்தில் பறந்து செல்வது போலவும் கனவுண்டாகும். இத்தகைய கனவுகளைக் **கர்மக் கனவுகள்** என்போம்.

கர்மக் கனவுகள் மனிதனுக்குச் செய்யும் உதவி மிகப்பெரிது. அவன் உடலில் ஏதாவதோர் நோய்க் காரணம் புகுந்திருந்தால், அது நோயாக வளரும் பல நாட்களுக்கு முன்பே குறிகளால் கனவு அவனை எச்சரிக்கிறது. கனவைப் பொருள் செய்தறிய முடியாதவர்கள் இவ்வரிய எச்சரிக்கையை அறிந்து, நோய் முதிராத முன்பே எளிய சிகித்சையால் சுகம் பெற முடியாமற் போகிருர்கள், **உடலின் ஒவ்வொரு கோளாறும் கர்மக் கனவுகள் மூலம் மனிதனுக்கு முன்கூட்டி**

அறிவிக்கப்படுகிறது.

கர்மக் கனவுகளின் தத்துவத்தை ஒன்றிரண்டு பரிட்சைகளால் பரிட்சித்தறியலாம். நன்ருகத் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவனின் உடலில் ஊசியால் குத்தினுல், கத்திச் சண்டையிட்டு தசையோ, கையோ அறுபடுவதுபோல் கனவு காண்பான், தூங்குபவனின் கால் பெரு விரலில் மெதுவாகச் சுண்டி விட்டால் குத்துச் சண்டையோ, மல்யுத்தமோ போட்டு அவத்தைப் படுவதுபோல் கனவுண்டாகும். தூங்குபவன் கண்களைத் தாக்கும் வண்ணம் பிரகாசமான வெளிச்சத்தைப் படச் செய்தால் சூரியனிலோ, சந்திரனிலோ, பிரகாசமான அரண்மனையிலோ சென்று உலவுவதாகக் கனவுண்டாகும்.

முன் கூறப்பட்டக் கனவுகளன்றி மற்ருேர் வகைக் கனவு சிலருக்குச் சில சமயங்களில் மட்டும் நேரிடுவதுண்டு. சித்தத்துடன் அவர்கள் உணர்வு கூடி உடலை விட்டு உண்மையாகவே வெளிப்பட்டு ஒழுங்கில்லாமல் பல இடங்களில் சுற்றித்திரிவதைக் கனவு நிலையாகக் காண்பதுண்டு. இக்கனவில் உண்மையாகவே காணும் காட்சிகள் கனவின் காட்சிகளாக அனுபவிக்கப்படும். இவை நேருக்கு நேராகவே காணும் காட்சிகளானவை இது எப்படி ? ஏன் ? யாருக்கு நேரும் என்பதை இங்கு விவரிக்கத்தேவையில்லை. இத்தகையக் கனவுகளை **நேர்க் கனவுகள்** எனலாம்.

கனவுகள் மனிதனுக்கு எச்சரிக்கை செய்யவே உண்டாகின்றன என்பதும், குறிகளால் கருத்தை வெளியிடும் நிலையில் உண்டாவதால் சாதாரண மக்கள் கனவின் முன்னறிவிப்பைப் பயன்படுத்த முடியாமற் போகிருர்களென்பதும், சில சாதனைகள் மூலம் விருப்பமான

சந்தேகத்துக்கு விடையான கனவுகளைக் காணக் கூடு மென்பதும் இதுவரை விளக்கப்பட்டது.

சில கனவுகள் மனிதனுக்கு ஒன்றை அறிவிப்பதற் குப் பதிலாகத் தாமே நன்மை செய்கின்றன என்பதைக் காண்போம். கனவின் அனுபவம் விழித்த பிறகுதான் மாறுகிறதன்றி, கனவு நீடித்திருக்கும் வரை அதற்கும் விழிப்பு நிலைக்கும் வேற்றுமை இருப்பதில்லை. விழிப்பு நிலையில் நாம் ஓர் பயங்கரத் தோற்றத்தைக் காணும் போது நம் அநுபவம் எப்படி இருக்கிறதோ, அப்படி யேக் கனவில் அதைக்காணும்போதும் இருக்கிறது. விழிப்பு நிலையில் நாம் அடிபட்டால் நோயை உணர்வது போலவே, கனவில் அடிபட்டாலும் அப்போது வரை உணர்கிறோம். கனவு இருக்கும்வரை அவ்வேதனை, விழிப்பு நிலை வேதனையைவிட மாறாக இருப்பதில்லை. சில சமயங்களில் கனவில் உண்டாகும் பயம் விழித்த பிறகும் வெகுநேரம் வரை அப்படியே இருப்பதுண்டு. விழிப்பு நிலையில் ஓர் பேயைக் கண்டவன் முகம் எப்படி மாறுகிறதோ, அப்படியேக் கனவில் பேயைக் காணும் போதும் மாறுகிறதென்பதை, கனவு கண்டு கொண் டிருப்பவனின் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள லாம். கனவில் கோபமாயிருப்பதை உடல் நடுக்கத் தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். கனவில் பயங் கரமான ஒன்றைக்காணும் குழந்தைகள் விழித்த பிற கும் பல மணி நேரங்கள் அதையே காண்பதுபோல் வீறிட்டழுவதைக் காணலாம்.

இந்த உண்மைகளால் நாம் என்ன அறிகிறோம்? **விழிப்பு நிலையில் உண்டாகும் கோபம், பயம், காமம் முதலான உத்வேகங்கள் உடலை எப்படி பாதிக்கின்றனவோ, அப்படியே கனவில் உதிக்**

கும் உத்வேகங்களும் பாதிக்கின்றன. உடலை மட்டுமல்ல, மனதையும் கனவுகள் பாதிக்கின்றன. மனதில் பயமிருக்கா விட்டால் உடலில் மாறுதல்கள் ஏற்படாதல்லவா? தீய உத்வேகங்கள் உடலிலும், மனதிலும் தீய நிலையை உண்டாக்குவதுபோல், நல்ல உத்வேகங்கள் நல்ல நிலையை உண்டாக்குமல்லவா? ஒரு நோயாளி அடிக்கடி நல்ல உத்வேகங்கள் எழும் கனவுகள் கண்டு வந்தால், அவைகள் அவன் நோயுக்கு நன் மருந்தாகி நன்மை செய்யும். ஓர் ஆரோக்யவான் அடிக்கடி தீய உத்வேகங்களெழும் கனவு கண்டு வந்தால் வெகு சீக்கிரத்தில் உடல் நலம் குன்றி அவத்தையுறுவான். இத்தகைய கனவுகளை **உத்வேகக் கனவுகள்** எனலாம், சில நோயாளிகள் தூங்கும்போது நல்ல உத்வேகக் கனவு காணும்படிச் செய்வதன்மூலம் மருந்தின்றி நோயை சுகப்படுத்தும் முறை மேநாடுகளில் கையாளப்பட்டு வருகிறது. இதைக் **கனவு சிகித்சை** என்பார்கள். நன்றாக அயர்ந்து தூங்குபவனை நாம் சில எளிய உபாயங்களைக்கொண்டு கனவு காணும்படிச் செய்து விடலாம், அடிக்கடி நல்ல கனவுகள் கண்டு வரும்படிச் செய்தால் வெகு விரைவில், அவன் உடலில் இருக்கும், திராதெனக் கைவிடப்பட்ட நோய் எளிதாக விலகிச் சுகம் பெறக்காணலாம். நாமிங்குச் செய்வதெல்லாம் அவன் கனவில் "நோய் விலகுகிறது" என்ற எண்ணத்தைச் சித்தத்தில் ஊன்றச் செய்வதே. அது அவன் சித்தத்தில் பதிந்து விட்டால் நிச்சயமாய்ப் பயன் பெறுவானென்பதை நமது "**மானத சிகிச்சை**"* என்ற நூலில் படித்தறியலாம். உடற் பிணிகளை மட்டுமல்ல,

* இவ்விவரங்களை நமது "*மானத சிகிச்சை*" என்ற நூலில் காணலாம்.

மனிதனின் குணங்களையும் இம்முறைகொண்டு மாற்றியமைக்கலாம். கயவனைக் கல்விப்பற்றுக் கொள்ளும்படியும், மூர்க்கனைச் சாந்தமானவனாகவும் மாற்றி விடலாம்.

கனவாலடையும் பயன் எத்துணை பெரிது பார்த்தீர்களா !

ஆத்ம யோக ஞான சபை

நடவடிக்கைகள்

1. யோகாஸ்ரமம் :— யோகாசனம், இராஜ யோகம், மந்த்ர யோகம், பக்தியோகம், குண்டலினி யோகம், ஞானயோகம் முதலான பாரதீய யோக முறைகளும், ஹிப்னுடிசம், மெஸ்மெரிசம், க்ளேயர் வாயன்ஸ், டெலிபதி முதலான மேநாட்டு சாதனு முறைகளும் நேர் முகமாகவும், தபால் மூலமாகவும், விஞ்ஞான ஆதாரங்களுடன் கற்பிக்கப்பட்டு வருகிறது.

2. வேதாந்தப் பாடசாலை :— வேதாந்த, யோக வித்தைகளில் கல்வி பயிற்றுவிக்கும் நோக்குடன் " மனோ தத்வ பூஷண்," " வேதாந்த பூஷண்," " நியாய பூஷண்," " யோகாசார்ய " முதலான நான்கு பரிட்சைப் பாடதிட்டங்கள் தமிழில் வகுத்துள்ளோம். இவைகளை நேர் முகமாகவும், தபால் மூலமாகவும் கற்பித்து, பரிட்சை வைத்து, தேறினவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்கி வருகிறோம்.

3. வேதாந்தப் புத்தக சாலை :— வேதாந்த தத்துவங்களுக்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்து விவரிக்கும் தன்மையில் பல அரிய தமிழ் நூல்கள் தயாரித்துள்ளோம். பட்டியல் தேவையானவர்களுக்கு அனுப்பப்படும்.

4. வேதாந்த நூல் நிலையம் :— வேதாந்த சம்பந்தப்பட்ட பல மொழிப் புத்தகங்கள் கொண்ட நூல் நிலயம் ஏற்படுத்தியுள்ளோம். வேதாந்தப் புத்தக நன்கொடைகள் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. வேதாந்த வாசக சாலை :— வேதாந்த, பக்தி

சம்பந்தமான சில பத்திரிகைகள் கொண்ட ஓர் இலவச வாசக சாலே நடத்தி வருகிறோம்.

6. உபந்யாசப் பகுதி :—வேதாந்த நூற்களே விஞ்ஞான ஆதாரத்துடன் பொருள் செய்யும் பொது உபந்யாசங்கள் நடத்திவருகிறோம்.

7. வேதாந்த முகாம் :—அவ்வப்போது வெளியூர்களில் முகாமிட்டு, வேதாந்த, யோகப் பிரசாரம் செய்துவருகிறோம்,

8. சந்தேக நிவர்த்திப்பகுதி :—வேதாந்த, யோக சம்பந்தமான எல்லாக் கேள்விகளுக்கும் விஞ்ஞான விளக்கங்களுடன் விடை சொல்கிறோம்.

9. யோக அவுஷதாலயம் :—பல அரிய மூலிகைகளேக்கொண்டு உயர்ந்த மருந்துகள் தயாரித்து, அவைகளே ஜபத்தில் வைத்து, மனோசக்தியை ஊட்டித் தயார் செய்து பொதுமக்களுக்குக் கொடுத்து வருகிறோம்.

10. மானத சிகித்சா நிலயம் :—(PSYCHO-THERAPIC ASYLUM) :—கொடிய உடற்பிணிகளேயும், மனக்கோளாறுகளேயும், பில்லி, சூனியம் போன்ற குற்றங்களேயும் ஆத்ம, மன சக்தியால் பூரண சவுக்கியம் செய்கிறோம்.

கனவு ஜோதிடம்—(DREAM - ANALYSIS)

ஒவ்வொரு கனவும் மனிதனுக்கு நேரப்போகும் ஓர் சம்பவத்தை முன் கூட்டி அறிவிப்பதென அறிவீர்களா? கை, கால் முதலான உடலுறுப்புகள் மனிதனுக்குச் சில உபயோகங்களுக்காக இருப்பதுபோல் கனவு அவனின்

வருங்காலத்தை விளக்கும் சாதனமாக அமைந்துள்ளது. உங்கள் கனவை விவரமாக எழுதியனுப்பினல் அது உங்களுக்குக் காட்டும் முன்னெச்சரிக்கை இன்னதெனச் சொல்கிறோம். பலன் விஞ்ஞான ஆதாரத்துடன் சொல்லப்படும்.

ஒரு கனவுக்குப் பலன் சொல்ல ரூ. *1—4—0.*

கனவு சாதனை—(DREAM WHEN YOU LIKE)

நாளைக்கு உங்களுக்கோ, உங்கள் மனைவி மக்களுக்கோ, தொழிலுக்கோ என்ன ஏற்படும் என்பதைக் கனவு மூலம் நீங்கள் அறிந்து கொண்டு அதற்குத்தக்க முன்னெச்சரிக்கையுடன் இருக்கலாம். இதற்கு வேண்டுமானபோது, உங்கள் விருப்பத்துக்கு விடையளிக்கும் கனவு காண கற்றுக்கொள்ள வேண்டும்.

வேண்டுமானபோது கனவு காணக் கற்றுக்கொடுக்கிறோம்.

கட்டணம் ரூ. *2—0—0.*

மனோபலப் பரிட்சை
(MIND—ANALYSIS)

உடற்பிணிகளுக்கு இரத்தம், மூத்திரம் முதலியவைகளைப் பரிட்சை செய்கிறார்கள், ஆனல் இதற்கு மனப் பரிட்சைத் தேவை யென்பதை மறந்துவிடுகிறார்கள். மன பலகீனத்தால் மனிதன் வாழ்க்கையில் அடையும் தோல்விகளுக்கும், இன்னல்களுக்கும் கணக்கில்லை. உங்கள் மனதின் பலம் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மனதில் எந்தப் பகுதி பலகீனமாயிருப்பதால்

வாழ்க்கையில் இன்னல்களை அனுபவிக்கிறீர்களென அறி வீர்களா ?

உங்கள் மனதில்—விசாரணை சக்தி, சமயோசிதச் சத்தி, ஆழ்ந்து நினைச்சக்தி, தாரணை சக்தி, வேகமாய் நினைச்சக்தி, ஏகாக்ர சக்தி, ஞாபகச் சக்தி, ஸ்திர சக்தி, கிரஹண சக்தி, எதிர்ப்புச் சக்தி, இச்சா சக்தி முதலியவை எவ்வளவு பலக் குறைவாயிருக்கின்றன, இதனால் என்ன நிலை உங்கள் வாழ்க்கையில் இருக்குமென்பதைப் பரிட் சித்துச் சொல்கிறோம்.

கட்டணம் ரூ. 2—0—0.

குறையுள்ள பகுதியை வளர்ப்பதால் பல இன்னல் களை எளிதில் கடக்கலாம்.

ஆரோக்கிய சாதனை
(HEALTH CONTROL)

சோர்வு, தளர்ச்சி, வலுவில்லாமை, அடிக்கடி நோயு றல் முதலானவைகளிலிருந்து மீண்டு, நல்ல ஆரோக் கியமும், பலமும், தேஜஸ்ஸும் பெற ஓர் எளிய சாதனை யைக் கற்பிக்கிறோம். சில தினங்கள் ஆசிரியரின் நேர் முகத்தில் பயின்று பழகியபின் வீட்டிலேயே நீங்கள் செய்து இன்பம் பெறலாம்.

கட்டணம் ரூ. 5—0—0.

சுபாவ பரிவர்த்தனை
(CHANGE OF TEMPERAMENT)

உங்களில் புகை குடித்தல், குடி முதலான ஏதாவது தீய பழக்கம் இருக்கிறதா ? அதிலிருந்து விடுபட விரும் பியும் முடியாமல் இருக்கிறீர்களா ? சில தினங்களுக்குள்

அக்கொடிய பழக்கத்திலிருந்து உங்களை விடுவிடுக்கிறோம்.

உங்களுக்கோ, உங்கள் மனைவி, மக்களுக்கோ அதிகமான கோபம், பயம், கோழைத்தனம், காமம் முதலான கெட்ட குணங்கள் வருத்துகின்றனவா? அவைகளிலிருந்து மாற விரும்புகிறீர்களா? சில நாட்களில் அத் தீக்குணங்களைப்போக்கி, நற்குண முண்டாகச்செய்கிறோம்.

கட்டணம் தகுந்தபடி.

சித்த சோதனை
(PSYCHO—ANALYSIS)

உங்கள் சித்தத்தில் பதிந்திருந்து, விதியென்ற பெயரில் உம்மை ஆட்டிப் படைக்கும் கர்மங்களை ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தி யழித்துப் பேரின்பப் பெரு வாழ்வு எய்த விரும்புகிறீர்களா? எளிதாக உங்கள் விதியை மாற்றியமைக்கிறோம்; நீங்களே மாற்றிக்கொள்ளும் முறையையும் கற்பிக்கிறோம்.

கட்டணம் ரூ. 200—0—0.

சாதன சஞ்சீவி
(SELF—ANALYSIS)

உங்களில் ஓர் கொடிய பிணியோ, மனக்குறையோ இருக்கிறதா? வாழ்வில் முன்னேறும் வழி தெரியாமல் திகைக்கிறீர்களா? உங்கள் எல்லாக் குறைகளுக்கும் தகுந்த பரிகார முறையை உங்கள் அந்தராத்மாவிடம் கேட்டால் சொல்லும்.

தினசரி 2 மணி நேரச் சாதனையால் 3 மாதம் முதல் 1 வருடத்துக்குள் உங்கள் பக்குவத்துக்குத்தக அந்தராத்மாவுடன் தொடர்புகொள்ளப் பெறும்முறையைக் கற்பிக்கிறோம்,

கட்டணம் ரூ. *50—0—0.*

விண்ணப்பம்

மனோசக்தியால் பொதுமக்களுக்கு உதவிசெய்ய சபைக்கென ஓர் சொந்தக்கட்டிடம் தேவை. உடற்பிணிகளையும், மனப் பிணிகளையும் நீக்கும் சாதனைகள் அமைத்து மக்களுக்கு, யோகம் கற்பிக்க இது தேவை. தாராள நன்கொடை செய்யுங்கள்.

ஆத்ம யோக ஞான சபை

சென்னை-7.

76867

இந்நூலுக்கு
பத்திரிகைகள் வழங்கிய மதிப்புரைகள்

"ஆராய்ச்சி அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல் கனவு என்றால் என்ன? அது எவ்வாறு ஏற்படுகிறது? நம் கனவுகளுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? கனவுகளைக் கொண்டு அதன் பலன்களை எவ்வாறு பொருள் கொள்ளலாம்? என்பதையெல்லாம் திறனாய்வோடு ஆசிரியர் விளக்கமாக எழுதியுள்ளார். ஆவியையும் அதன் வினைகளையும் உறுதியாக நம்பும்படி பல மேனாட்டு உதாரணங்களை வியப்புறும் வகையில் எடுத்தாண்டுள்ளார்.

சிந்திக்கவைத்து நல்லன விழையும் கருத்துக்கள் இந்நூலில் செறிந்து கிடக்கின்றன. இப்போதெல்லாம் மேனாட்டுப் பாணியில் தமிழில் பல அரிய நூல்கள் வெளியாகின்றன. அவைகளைப் படித்துப் பயன் பெறலாம் என்பதற்கு இந்த "நாம் காணும் கனவுகள்" என்ற நூல் ஒரு எடுத்துக்காட்டாகும்.

— தினமணி 21–11–1970

DREAMS

Dreaming is a mysterious process of the human mind. and scientists are now trying to look into its complexities. Here the author discusses such questions as what causes the dreams, is it due to harbouring of some feeling by human beings, etc. The author tries to answer these points and also deals with the topic of ghosts and cites the experiences of some foreigners.

Much information in a short compass is presented in this book.

— INDIAN EXPRESS 26–6–1971

Wrapper printed at : MARUTHY PRESS, MADRAS-14.

வெளிவரும் அரிய நூற்கள்.

1.	மானத சிகிச்சை	...	0—3—0
2.	யோக விளக்கம்	...	0—4—0
3.	மரணத்தின் தத்துவம்	...	(அச்சில்)
4.	நித்திரையின் தத்துவம்	...	,,
5.	உள்மனமும் புறமனமும்	...	,,
6.	பஞ்ச கோசமும் சூக்ஷும உலகும்	...	,,
7.	ஆவி உலகம்	...	,,
8.	மானதத் தந்தி	...	,,
9.	சித்த மன வசியம்	...	,,
10.	ஏகாக்ர மனம்	...	,,
11.	திராடக மனம்	...	,,
12.	பிராணயாம விஞ்ஞானம்	...	,,
13.	மந்த்ர ஜப சித்தி	...	,,
14.	மனித காந்த சக்தி	...	,,
15.	பிறப்பின் முன்னும் இறப்பின் பின்னும்		,,
16.	பிராண சக்தி விளக்கம்	...	,,
17.	மானதக் காட்சி	...	,,
18.	கீதா யோகம்	...	,,
19.	சிருஷ்டி விஞ்ஞானம்	...	,,
20.	ஆன்ம நிருபணம்	...	,,

கிடைக்குமிடம்:—**ஆத்ம யோக ஞான சபை,**

1, மாணிக்க நாயகர் தெரு,

புரசைவாக்கம், சென்னை—7.